307-
133

புதுவாழ்வு வரிசை 1 பொருளாதாரப் பகுதி

# பணக்காரர் ஆகும் வழி

இஃது
முதியோர் கல்விக்கு உரியது;
பள்ளிக்கூட இளைஞர்கட்கும் ஏற்றது;
பொதுவாக எல்லோரும் படிக்கத்தக்கது.

*ஆசிரியர் :*
புலவர் சுந்தர சண்முகனார்
அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கூடம்,
புதுச்சேரி

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

பணக்காரர் ஆகும் வழி
ஆசிரியரின் நாற்பத்தோராவது வெளியீடு
சனவரி 1964

வெளியீடு—உரிமை :

பைந்தமிழ்ப் பதிப்பகம்
61–C, வைசியர் தெரு, புதுச்சேரி–1.

விலை : 75 புதுக்காசு

அமுர்தா பிரிண்டர்ஸ், சென்னை–24.

# பதிப்புரை

எல்லோரும் படிக்க வேண்டும்; எல்லோரும் புத்துலகக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்; எல்லோரும் புதுவாழ்வு பெற வேண்டும் — இத்திட்டம் நம் நாட்டின் இன்றைய குறிக்கோள்களுள் ஒன்றாகும்.

நம் நாட்டில் இன்றும் பலர் படிக்காதவரா யுள்ளனர்; அறிவிலும் செல்வத்திலும் ஏழையரா யுள்ளனர். இவர்களும் படித்து, புத்துலகக் கருத்துக்களை — அதாவது — புதுப்புது அறிவியல் களைப் பெற்று, அதன்படி நடந்து புதுவாழ்வு தொடங்க வேண்டும் என்னும் அடிப்படையில், ‘புது வாழ்வு வரிசை நூற்கள்’ பல வெளியிடத் தொடங்கியுள்ளோம். அவ்வரிசையில் ‘பணக்காரர் ஆகும் வழி’ என்னும் இந்நூல் முதலாவதாகும்— பொருளாதாரப் பகுதியாகும்.

இந்நூலில், தனியொருவர் பணக்காரர் ஆவதற்கும் வழி சொல்லப்பட்டிருக்கிறது—நாடு முழுவதுமே பணக்கார நாடாக மாறுவதற்கும் வழி சொல்லப்பட்டிருக்கிறது. தக்க படங்களும் இடம் பெற்றுள்ளன.

பயனுள்ள இவ்வெளியீட்டிற்குக் கல்வி நிலையத்தினரும் நூல் நிலையத்தினரும் அரசினரும் அளிக்கும் பேராதரவைப் பொறுத்து, எங்கள் ‘புது வாழ்வு வரிசை நூற்கள்’ மேலும் வளர இருக்கின்றன.

சிங்கார குமரேசன்




முத்தையனும் கண்ணனும் சங்கரனைக் கடலிலிருந்து தூக்கிவந்தனர்.

# பணக்காரர் ஆகும் வழி

“ வான் நிலவே என் வாழ்வு என்றாகும்
ஏன் பிறந்தேன் இந்தியாவில் நானே ?”

என்ற பாட்டு, அலை ஓசையின் நடுவே கேட்டது.

அன்றைக்குப் பருவம். முழு நிலா நாள். நிலா ‘தக தக’ என்று காய்ந்தது. முன் இரவு. மணி பத்து இருக்கும்.

கடல் கரை ஓரம். ஒரு மோட்டார் கார் போய்க்கொண்டு இருந்தது. காருக்குள் ஒருவர்

உட்கார்ந்து இருந்தார். காருக்கு உடையவர்தான் அவர். கார் ஓட்டி காரை மெள்ள ஓட்டினன். இருவர் காதிலும் அந்தப் பாட்டு கேட்டது.

கார் நின்றது. இருவரும் இறங்கினர். பாட்டு வந்த திசை நோக்கி நடந்தனர். பாட்டு புறப்பட்ட இடத்தை நெருங்கி விட்டனர். ஆனல் பாட்டு நின்று விட்டது. பாட்டை உண்டாக்கிய உருவம் தென்பட்டது. அது கடல் அலைகளின் நடுவே தத்தளித்தது. முழுகி எழுந்தது. சாகத் துணிந்தால் சமுத்திரம் முழங்காலா?

கார் ஓட்டி கண்ணனும் முதலாளி முத்தையனும் தண்ணீரில் இறங்கினர். தத்தளித்த உருவத்தைத் தாவிப் பிடித்தனர். தூக்கிக்கொண்டு வந்து கரை சேர்த்தனர். "தருணம் தப்பினல் மரணம்" என்பார்கள். தகுந்த சமயத்தில் உதவி கிடைத்தது.



எமன் வாயிலிருந்து ஓர் உயிர் மீண்டது.

கண்ணனும் முத்தையனும் தூக்கி வந்த மனிதனைத் தரையில் கிடத்தினர். அவன் இவர்களை மிரண்டு மிரண்டு பார்த்தான். எமதூதர்களோ என்று எண்ணினன். இல்லை என்று பிறகு தெரிந்து கொண்டான். எம தூதராய் இருந்தால் உயிரைக் கொண்டு போய் அல்லவா இருக்க வேண்டும்?

அவன் இவர்களை வெறுத்தான். ஏன் என்னைக் காப்பாற்றினீர்? நான் பிழைத்துக் கொண்டால் எனக்கு யார் சோறு போடுபவர்? என்று கடிந்து பேசினன்.

காரோட்டி கண்ணன் தேள் கொட்டிய திருடனைப் போல 'திரு திரு' என்று விழித்தான். ஆனல், முதலாளி முத்தையன் புன் சிரிப்புச்

சிரித்தார். பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது அல்லவா? இந்தியாவை வெறுத்து, சாகத் துணிந்த மனிதனுக்கு என்ன வைத்தியம் செய்வது? முத்தையனுக்கு ஒரு மருந்து நினைவு வந்தது. மணி, மந்திரம், ஔடதம் என்று மருந்தில் மூன்று வகை உண்டல்லவா? இந்த மருந்து பவளம் முதலிய மணிகளால் ஆனதும் இல்லை. செடி, கொடி, வேர்களால் செய்த ஔடதமும் இல்லை. மந்திர வகையைச் சேர்ந்தது. அந்த மந்திரத்தை முத்தையன் பாட்டாகப் பாடினார்.

" எத்தனை சென்மங்கள் வந்து பிறந்தாலும்
இந்தியா மண்ணிடை வேண்டுவனே "

என்ற பாட்டுதான் அந்த மந்திரம். அது பெரிய மருந்து.

இந்தப் பாட்டைக் கேட்டதும், சாகத் துணிந்த சங்கரன் எழுந்து



உட்கார்ந்தான். அவனது உயிரை மீட்க வந்த சஞ்சீவியோ இந்தப் பாட்டு?

சங்கரனுக்கு ஒரு புது உற்சாகம் பிறந்தது. புது தெம்பு உண்டாயிற்று. உண்மையில் அப்போது தான் அவனுக்கு உயிர் வந்தது. சங்கரன் கேள்விமேல் கேள்வி கேட்டான். முத்தையனும் முதல் தரமாகப் பதில் சொன்னார்.

சங்கரன் : எத்தனை பிறவி எடுத்தாலும் இந்தியாவில் பிறக்க வேண்டும் என்றீரே? அது ஏன்? இந்தியாவில் என்ன இருக்கிறது?

முத்தையன் : இந்தியாவில் என்ன இருக்கிறதா? நல்ல கேள்வி! இந்தியாவில் என்ன இல்லை? இருக்க வேண்டிய எல்லாம் இருக்கின்றன.

சங்கரன் : ஆமாம் எல்லாம் இருக்கின்றன. நாக்கில் நரம்பு இல்லாமல் சொல்கிறாயே. உன்னைப்போல் பத்துப் பண மூட்டைகள், எல்லாம் வைத்திருந்தால் போதுமா ? நீங்கள் பத்துப் பேர் மட்டுமா இந்த நாட்டில் வாழ்கிறீர்கள் ? என்னைப் போன்ற ஏழைகள் உன் கண்ணில் படவில்லையா ? கண்ணாடி கூட போட்டுக் கொண்டு இருக்கிறாயே. நன்றாய்ப் பார்.

முத்தையன் : இரு பார்க்கிறேன். கடல் தண்ணீர் பட்டதால் கண்ணாடி மங்கலாய் இருக்கிறது. துடைத்துப் போட்டுக்கொண்டு நன்றாய்ப் பார்க்கிறேன்.

சங்கரன் : இந்தக் கிண்டல் எல்லாம் வேண்டாம். நரிக்குக் கொண்டாட்டம், நண்டுக்குத் திண்டாட்டம். நான் சாப்பாடு இல்லாமல்



சாகக் கிடக்கிறேன். நீ வயிற்றை வண்ணார் சால் மாதிரி வைத்துக் கொண்டு என்னைக் கிண்டலா செய்கிறாய் ? கடலில் விழுந்தவனை ஏன் எடுத்து வந்தாய் ? சாகவும் விடாமல் வாழவும் விடாமல் செய்து விட்டாயே, பாவி !

முத்தையன் : நானா கிண்டல் செய்தேன் ? நான் கண்ணாடி போட்டிருப்பதாக நீ தான் கிண்டல் செய்தாய். அதற்கு நான் பதில் சொன்னேன். அவ்வளவுதான். அது போகட்டும். நீ ஏழையாய் இருக்கிறாய். நான் பணக்காரனாய் இருக்கிறேன். இதற்கு என்ன காரணம் ? உன் வாயாலேயே சொல்.

சங்கரன் : காரணமாவது ? கத்தரிக்காயாவது ? நீங்கள் ஊரை அடித்து உலையில் போடு

கிறீர்கள். திருடன் இரவில் கொள்ளை அடிக்கிறான். பணக்காரன் பகலில் கொள்ளை அடிக்கிறான்.

முத்தையன் : ஏன் நீ கொள்ளை அடிக்கக் கூடாது? உன்னைத் தடுத்தவர் யார்? எங்களைக் கொள்ளை அடிக்கச் சொன்னவர் யார்? நாங்கள் எப்படி கொள்ளை அடிக்கிறோம்?

சங்கரன் : வியாபாரம் செய்கிறீர்கள். கொள்ளை அடிக்கிறீர்கள்.

முத்தையன் : நீயும் வியாபாரம் செய்யலாமே! வியாபாரம் எல்லோருக்கும் பொதுதானே! இன்னார் செய்யலாம் இன்னார் செய்யக் கூடாது, என்ற தடை கிடையாதே!

சங்கரன் : வியாபாரம் செய்ய முதல் வேண்டுமே. வெறுங் கையை முழம் போட முடியுமா?



முத்தையன் : எங்களுக்கு மட்டும் முதல் வைத்துக் கொடுத்தவர் யார்? நான் எப்படி முழம் போடுகிறேன்? உன் கைகளை விட என் கைகள் குட்டையாய் இருப்பதைப் பார்.

சங்கரன் : உன் அப்பன், பாட்டன் முதல் வைத்துவிட்டுப் போய் இருக்கலாம்.

முத்தையன் : ஓ! அப்படியா? என் அப்பன், பாட்டனுக்கு முதல் வைத்துக் கொடுத்தவர் யார்? உலகத்து வியாபாரிகள் எல்லோரும், பிறர் வைத்த முதலிலா வியாபாரம் செய்கிறார்கள்?

சங்கரன் : ஊம், பின்னே எப்படி? யாராவது கை கொடுத்துத் தூக்கி விட்டுத்தான் இருக்க வேண்டும்.

முத்தையன் : ஏன், உனக்கும் யாராவது கை கொடுக்கும்படி நீ நடந்து கொள்ளலாமே ! அப்படிச் செய்யாதது உன் குற்றம். அதற்கு, பாடுபட்டுப் பணக்காரன் ஆனவன் என்ன செய்வான் ? அப்படியே ஒருவர் உதவி செய்து விட்டால் போதுமா ? ஒருவர் சொல்லிக் கொடுத்த சொல்லும் கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாளைக்கு வரும் ? நாமே பாடுபட வேண்டும். நான் எப்படி முன்னுக்கு வந்தேன் தெரியுமா? சொல்லவா ?

சங்கரன் : சொல்லு !

முத்தையன் : என் கதை பெரிய சோகக் கதை. பத்து ஆண்டுக்கு முன்பு நான் பட்ட பாடு பகவானுக்கே தெரியும். குழந்தைகள் பசியால் அழும். அதைப்



பார்த்து, நானும் என் மனைவியும் எத்தனையோ முறை அழுது இருக்கிறோம். கிழியாத புடவையே இல்லாததால் வெளியில் வர என் மனைவி வெட்கப்படுவாள். குடிசை எப்படி தெரியுமா? மழை பெய்தால் அது எங்கள் தலையில்தான். இதற்குமேல் எங்கள் ஏழ்மையைப் பற்றிச் சொல்ல வேண்டியது இல்லை.

சங்கரன் : என் குடும்ப நிலையும் இப்போது இதுவேதான்.

முத்தையன் : நான், என் மனைவி இருவருமே வேலை செய்வோம்.

சங்கரன் : ஐயையோ ! பெண் பிள்ளையைக் கூடவா வேலை செய்ய விடுவது ?

முத்தையன் : ஏன், செய்தால் என்ன? வெளி நாடுகளில் செய்ய வில்லையா ? எல்லோரும் வேலை

செய்வதால்தான் அங்கெல்லாம் செல்வம் செழிக்கிறது.

சங்கரன் : இங்கேதான் ஆணுக்கே வேலை இல்லையே. பெண் என்ன வேலை செய்வது? சரி மேற்கொண்டு சொல்லு.

முத்தையன் : நாங்கள் இருவரும் வேலை செய்வோம். சில நாளைக்கு வேலை கிடைக்கும்; சில நாளைக்கு வேலை கிடைக்காது. வேலை கிடைத்தால் எங்களுக்கு வேட்டைதான். மீன் என்ன! ஆட்டு இறைச்சி என்ன! சாராயம் என்ன! சினிமா என்ன! ஒரே கொண்டாட்டம்! வந்த காசு முழுவதும் அன்றைக்கே எள்ளு!

சங்கரன் : வேலை கிடைக்காது போனல் என்ன செய்வீர்கள்?



முத்தையன் : ஆமாம், அமாவாசை சோறு அன்றாடம் கிடைக்குமா? வேலை கிடைக்கா விட்டால் கடன் வாங்குவோம். அதுவும் கிடைக்காது போனல் அரோகராதான். வயிற்றில் ஈரத் துணியைப் போட்டுக் கொண்டு பேசாமல் படுத்துக் கொள்வோம்.

சங்கரன் : இவ்வளவு ஏழ்மைக்கு நடுவே, எப்படி உங்களுக்குப் பணம் சேர்ந்தது. ஏதாவது சூது விளையாடியா? அல்லது கொள்ளை அடித்தா?

முத்தையன் : அப்படிச் செய்து ஆர் உருப்பட முடியும்? நாங்கள் அந்த ஈனச் செய்கையில் ஈடுபட வில்லை. பணக்காரர் ஆவதற்கு இரண்டு வழிகள் கண்டு பிடித்தோம். முன்னுக்கு வந்தோம்.

சங்கரன் : ஓ, அப்படியா! அந்த வழிகள் என்ன? ஏழைகளை இன்ப உலகத்துக்கு அழைத்துச் செல்லும் அந்த வழிகளை நான் உடனே அறிய வேண்டும்.

முத்தையன் : நீ மட்டுமா! எல்லோருமே அறிய வேண்டிய வழிகள் அவைகள். இதோ சொல்லுகிறேன். தினம் ஏதாவது ஒரு வேலை செய்தே தீரவேண்டும். எந்தப் பாடு பட்டாவது ஏதாவது ஒரு வேலை தேடியே தீர வேண்டும். ஒரு நாளும் சும்மா இருக்கவே கூடாது. இது ஒரு வழி.

சங்கரன் : சரி. இன்னொரு வழி?

முத்தையன் : இன்னொரு வழியா? இதுதான் முக்கியம். வேலை கிடைப்பதும் பெரிது இல்லை. வருமானம் வருவதும் பெரிது இல்லை. ஆனால், நான் இப்போது சொல்லப் போவது தான் முக்கியம். இப்படி நடப்பதுதான் பலரால் முடியாது. இதில் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும்.



சங்கரன் : அது என்ன? சீக்கிரம் சொல்லு. மணிக்கூண்டு எதிரில் வித்தை காட்டுபவன் போல என் ஆவலைத் தூண்டுகிறாயே! உடனே சொல்லு.

முத்தையன் : சொல்லுகிறேன். தினம் கிடைக்கும் வருமானம் முழுவதும் செலவு செய்துவிடக் கூடாது. கொஞ்சமாவது மிச்சம் பிடித்தே தீரவேண்டும். எதிலும் ஆடம்பரம் கூடாது. அவசியமான செலவே செய்ய வேண்டும். எதையும் சுருக்க

மாக, சிக்கனமாக முடிக்க வேண்டும்.

சங்கரன் : ஊம், இவ்வளவு தானு ?

முத்தையன் : இவ்வளவு தானு, என்று ஏன் உதட்டைப் பிதுக்கு கிருய் ? தினம் வேலை. தினம் வருமானம். தினம் சிறுதொகை மிச்சம். சிறுதொகை பிறகு பெரிய தொகை ஆகும். ‘பல துளி சேர்ந்தால் பெரிய வெள்ளம்’ என்பார்களே. அந்தத் தொகையைக் கொண்டு ஏதேனும் வியாபாரம் தொடங்கலாம். தொகைக்கு ஏற்ற வியாபாரம் போதும். முதலில் சின்ன வியாபாரம் செய்யலாம். ‘சிறுகக் கட்டிப் பெருக வாழ்’ என்பார்களே. வியாபாரம் என்று என்ன ! நல்ல கைத்தொழிலும் செய்யலாம்.



சங்கரன் : நான் சொன்னது சரியாய்ப் போயிற்று.

முத்தையன் : என்ன சரியாய்ப் போயிற்று ?

சங்கரன் : வித்தை காட்டுபவன் போல் பேசுகிருய் என்றேனே, அதுவேதான் உன் பேச்சு. அவன் ஒரு கூடையைக் கவிழ்த்து வைத்திருப்பான். உள்ளே ஏதோ இருக்கிறது - இருக்கிறது என்பான். காட்டப் போகிறேன் — காட்டப் போகிறேன் என்பான். ஆனல், உள்ளே ஒன்றும் இருக்காது. கூடையையும் திறந்து காட்டமாட்டான். அப்படியே இருந்தாலும், திறந்தாலும், குரங்கு உட்கார்ந்து இருக்கும். அல்லது குட்டிச் சாத்தான் பொம்மை காணப்படும். உன் பேச்சும் அப்படித்தான்.

**முத்தையன் :** ஏன் என் பேச்சை அவ்வளவு கிள்ளு கீரையாக மதிக்கிறாய் ?

**சங்கரன் :** பின்னே என்ன ? நீ சொல்லும் திட்டம் எல்லாம் நடை முறையில் ஒத்து வருமா? ஏட்டில் எழுதி நாக்கு வழித்துக் கொள்ளலாம். அவ்வளவு தான். ஏதோ புது வழி சொல்லப் போகிறாய் என்று இவ்வளவு நேரம் காது கொடுத்தேன். கடைசியில் பார்த்தால், உன் வழி போகாத ஊருக்கு வழியாய் இருக்கிறது.

**முத்தையன் :** ஏன் ? நான் காட்டும் வழியில் போக என்ன தடை ? கையால் ஆகாத வாழைப் பழச் சோம்பேறிக்கு முடியாமல் இருக்கலாம்.



**சங்கரன் :** அப்படி சொல்லக் கூடாது. வருமானத்தில் தினம் மிச்சம் பிடிக்க வேண்டும் என்கிறாய். ஒரு நாளைக்கு வரும் வருமானம் அரை வயிற்றுக் கஞ்சிக்கே போதவில்லை. எப்படி மிச்சம் பிடிப்பது ?

**முத்தையன் :** அது சரி. வேலை கிடைக்காத நாள்களில் என்ன செய்வோம். அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழி இல்லையே. அப்படியே நினைத்துக் கொள்ள வேண்டும். நாலணா என்றாலும் காலணா மீக்க வேண்டும்.

**சங்கரன் :** நன்றாய் இருக்கிறது நீ சொல்வது ! அரைக் காசு கல்யாணம் ; அதிலே ஒரு வாண வேடிக்கையா ? பெரிய வருமானம் வந்தால் மீக்கலாம். சின்ன வருமானத்தில் அது

முடியாது. ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் வந்தாலே சிலருக்குப் போத வில்லை. ஒரு ரூபாய் கிடைத்தால் எப்படி மீப்பது ?

முத்தையன் : நான் கேட்பதற்குப் பதில் சொல்லு. ஒருவனுக்குத் தினம் ஐந்து ரூபாய் வருமானம். ஆனால் அவன் ஐந்தரை ரூபாய் செலவு செய்கிறான். வேறு ஒருவனுக்குத் தினம் ஒரு ரூபாய் வருமானம். அவன் அதிலேயே ஐந்து பைசா மிச்சம் பிடிக்கிறான். இவர்களில் எவன் பெரிய வருமானம்உடையவன்? எவன் பணக்காரன் ?

சங்கரன் : ஐந்து ரூபாய் வருமானம் உடையவன் தான் பணக்காரன்.

முத்தையன் : அதுதான் இல்லை. ஐந்து ரூபாய் வந்தும் அவன் அரை ரூபாய் கடன் வாங்கு



கிறான். நாளுக்கு நாள் கடன் ஏறும். ஆகையால் அவன் கடன்காரன் ; ஏழை. ஆனால் ஒரு ரூபாயில் ஐந்து பைசா மிச்சம் பிடிக்கிறானே, அவன் பணக்காரன். நாளுக்கு நாள் அவனிடம் பணம் சேரும். வாழ்க்கையில் இதுதான் பெரிய இரகசியம். அதிக வருமானம்–அதிக செலவு. இந்த முறை சரி இல்லை. குறைந்த வருமானம் வந்தாலும் அதிலே மிச்சம். இது சரியான முறை. இந்த மூல மந்திரத்தை யாரும் மறக்கக் கூடாது. ஒருவன் பணக்காரன் ஆவதற்கு இது ஒரு முக்கியமான வழி.

சங்கரன் : இப்படி எல்லாம் மந்திரத்தால் மாங்காய் விழ வைக்க முடியாது. இந்தச் செப்பிடு வித்தையை நான் ஒத்துக்

கொள்ள முடியாது. இந்தச் சிக்கன முறையால் இரண்டொரு கருமிகள் பணக்காரர் ஆகலாம். அது போதுமா? காசு எப்போது மிஞ்சும்? எப்படி மிஞ்சும்? எல்லோருக்கும் வேலை கிடைத்தால் அல்லவா? எல்லோருக்கும் வருமானம் வந்தால் அல்லவா? உள்ளதுக்கே ஒரு முழம் கட்டை. எதை மிச்சம் வைப்பது?

முத்தையன்: நாங்கள் எப்படி மிச்சம் பிடித்தோம்? எப்படி பணக்காரர் ஆனோம்?

சங்கரன்: எப்படி?

முத்தையன்: முதலில் ஊதாரித் தன்மையில் செலவு செய்தோம். பிறகு கருத்து வந்து விட்டது. பட்டால்தானே தெரியும்? இரவு பகலாக உழைத்து வேலை



செய்தோம். கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் மிச்சம் பிடித்து வந்தோம். உருப்படியாக ஒரு தொகை சேர்ந்தது. அதைக் கொண்டு சிறிய வியாபாரம் ஆரம்பித்தோம்.

சங்கரன்: என்ன வியாபாரம்?



சிறிய கடைகள் பெரிய கடைகள் ஆயின.

முத்தையன்: நான் வெற்றிலை பாக்குக் கடை வைத்தேன். என் மனைவி பலகாரக் கடை நடத்தினாள். வெற்றிலை பாக்குக்

கடை வளர்ந்து மளிகைக் கடை ஆனது. அது பெரிய மண்டி ஆயிற்று. பலகாரக் கடை பெருத்து ஓட்டல் ஆயிற்று. இப்போது இரண்டு வியாபாரமும் விரிவான முறையில் உள்ளன. பெரிய அளவில் நடக்கின்றன. இதுதான் என் கதை. சுருக்கமாய்ச் சொன்னேன்.

**சங்கரன் :** நம் குட்டையான அனுபவத்தைக் கொண்டு நாம் உலகத்தை அளக்கக் கூடாது. ஒரு முடிவுக்கும் வந்து விடக் கூடாது. நாலா வகையையும் ஆராய்ச்சி பண்ணிப் பார்க்க வேண்டும்.

**முத்தையன் :** அது என்ன? என்னவோ அதிர்வேட்டு போடுகிறாயே ?



**சங்கரன் :** நீ காசு மிச்சம் பிடித்தாய். கடை வைத்தாய். பணக்காரன் ஆகிவிட்டாய். இருக்கலாம். ஒருவர் முன்னுக்கு வர இதுவும் ஒரு வழிதான். ஒத்துக் கொள்கிறேன். ஆனால் உன்னைப் போலவே சிலர் மீத்துக் கடை வைத்தார்கள். பிறகு சேர்த்துக் கோட்டை விட்டு விட்டார்கள். பரம்பரை வியாபாரிகளும் பஞ்சைகள் ஆனது உண்டு. இப்படி சிலர் வாழ்க்கையில் உயரலாம், தாழலாம். இது உலக இயற்கை. ஆனால், நான் விரும்புவது வேறு.

**முத்தையன் :** அது என்ன ? சொல்! ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்ப்போம்.

**சங்கரன் :** அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்சு முதலிய

நாடுகளில் செல்வம் மிகுதியாம். அங்கு எல்லோருக்கும் வசதியான வாழ்க்கையாம். அவைகளைப் போல நம் நாடும் முன்னேற வேண்டும். நாம் எல்லோரும் வசதியாக வாழ வேண்டும். வேறு எந்தக் கவலை இருந்தாலும் இருக்கலாம்; வயிற்றுக் கவலை மட்டும் இருக்கவே கூடாது. இதற்கு ஏதாவது வழி உண்டா?

முத்தையன் : நிறைய உண்டு.

சங்கரன் : ஒருவர் இருவர் பணக்காரர் ஆனால் போதாது. அவர்கள் மறுபடியும் ஏழைகள் ஆகி விடலாம். நாட்டில் எந்த மூலை முடுக்கிலும் வறுமை இருக்கக் கூடாது. அப்போது தான் எல்லோருடைய நல் வாழ்வும் உறுதி பெறும். தப்பித்



தவறியும் யாரும் ஏழையாக மாற முடியாது. யாருக்கும் சோற்றுக் கவலை வரவே வராது இந்த விதமான அமைப்பு நாட்டில் ஏற்பட வேண்டும். வெள்ளைக்கார நாடுகள் வசதியாக வாழும்போது, நம் நாடு ஏன் வாழக் கூடாது? இதற்கு வழி தேவை!

முத்தையன் : வழிகள் உண்டு. முதலாவதாக ஒன்று சொல்கிறேன். எல்லாப் பொருள்களையும் நாம் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். மேலை நாடுகளில் இப்படித்தான்!

சங்கரன் : நம் நாட்டில் என்ன இருக்கிறது-எல்லாம் நாமாக உற்பத்தி செய்து கொள்வதற்கு?

முத்தையன் : நம் நாட்டிலே என்ன இல்லை ?

சங்கரன் : என்ன இல்லையா? இரும்பு உண்டா? நிலக்கரி உண்டா? பருத்தி இருக்கிறதா? தானியம் தவிசு இருக்கின்றதா? மின்சாரம் இருக்கிறதா? கத்தியிலிருந்து கப்பல் வரை எல்லாம் வெளி நாட்டிலேயிருந்துதானே வர வேண்டுமாம்! அவற்றை நாமே செய்து கொள்வதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் நம் நாட்டிலே இல்லையாமே! நாட்டிலே எதுவும் இல்லாமையாலே நாமும் எதுவும் இல்லாத ஏழையாக இருக்கிறோம்.

முத்தையன் : நன்றாய்ச் சொன்னாய்! உனக்குத் திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் தெரியுமா ?





திருவள்ளுவர்

சங்கரன் : கேள்வி!

முத்தையன் : அவர் இது பற்றிச் சொல்லியுள்ளார். "ஒன்றும் இல்லை என்னும் சோம்பேறியைக் கண்டால் பூமாதேவி சிரிப்பாளாம்."*

சங்கரன் : அப்படியென்றால், நம் நாட்டிலும் ஏராளமான செல்வங்கள் உள்ளனவா ?

* "இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்" —குறள்

முத்தையன் : ஓ!

சங்கரன் : என்ன என்ன செல்வம் என்று கொஞ்சம் சுருக்கமாய்ச் சொல்லு. கேட்போம்.

முத்தையன் : அப்படி கேள், சொல்கிறேன்.

"முதலில் நம் நாடு, எத்தனையோ நாடுகளைவிட மிக மிகப் பெரியது. இது ஒரு பலம். அடுத்தபடியாக, உலக மக்கள் தொகையில் ஏழில் ஒரு பங்கினர் நம் நாட்டு மக்கள். எனவே மக்கள் பலமும் நமக்கு மிக அதிகம். இன்னும், கால்நடைகளை எடுத்துக் கொள்வோம். எல்லா இனங்களும் நம்மிடம் உண்டு. உலகத்தின் மொத்தக் கால் நடைகளுள் மூன்றில் ஒரு பங்கு நம் கால் நடைகளே. மேலும், மக்கள், தாவரம் முதலிய எல்லா வளர்ச்சிக்கும் சூரிய வெளிச்சம் மிக முக்கியம்.



அது நம் நாட்டில் ஏராளம் உண்டு. மழை தரும் பருவக் காற்றுக்கும் பஞ்சம் இல்லை. ஏன், மலைக்குப் பஞ்சமா? காட்டுக்குப் பஞ்சமா? ஆற்றுக்குப் பஞ்சமா? கடலுக்குப் பஞ்சமா? உணவுப் பொருளில்தான் எது நம் நாட்டில் விளையாது? இங்கிலாந்திலே பருத்தியும், அரேபியாவிலே ஆப்பிளும் விளைய முடியாது. ஆனால், எல்லாம் நம் நாட்டில் விளையும். பயிரிடும் முறையுடன் ஊக்கமே நமக்குத் தேவை.

சங்கரன் : ஓ, அப்படியா! ஊம், சொல்லு!

முத்தையன் : இன்னும் உலோகங்கள் பற்றிச் சொல்லவில்லையே! நிலக்கரியில் உலகத்தில் ஒன்பதாவது இடம் நமக்கு. ஆனால், இன்னும்

எவ்வளவோ நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. நாம் தோண்டிப் பார்க்கவில்லை. அடுத்தபடியாக, இரும்பு, மாங்கனிஸ், மைகா முதலிய பொருள்களில் உலகில் இணையற்ற நாடு நம் இந்தியா! இன்னும் என்னென்ன வேண்டுமோ, எல்லாம் நம் நாட்டில் உண்டு. நாம் அவற்றைக் கண்டு எடுக்கவில்லை. எடுக்கும் கொஞ்சம் மூலத் தாதுக்களையும் வெளி நாட்டாருக்கு அனுப்புகிறோம். அவர்கள் பொருள்களாகச் செய்து அதிக விலையில் நமக்கு அனுப்புகிறார்கள்.

சங்கரன் : அப்படியென்றால், நாம் என்ன செய்தால் முன்னுக்கு வரலாம் ?



முத்தையன் : சொல்கிறேன். தேனீக்கள் தேன்கூடு கட்டுவது தெரியுமா ?

சங்கரன் : தெரியும்.

முத்தையன் : தேனீக்கள் எங்கிருந்தோ தேனை மொண்டு கொண்டு வந்து தேன் கூட்டில் கொட்டவில்லை; பூக்களில் இருந்து ஏதோ சாரத்தை உறிஞ்சுகின்றன; என்னவோ செய்து தேனை மாற்றுகின்றன.

சங்கரன் : உண்மைதான்.

முத்தையன் : அதுபோலவே நாமும் இருக்கும் மூலப் பொருள்களையெல்லாம் கண்டு பிடித்துத் தோண்டி எடுக்க வேண்டும். அவற்றைக் கொண்டு எல்லாப் பொருள்களையும் நாமே செய்து கொள்ள வேண்டும். அப்படி

செய்தால், நம் நாட்டுப் பணம் வெளி நாடு செல்லாது; வேலை யில்லாத் திண்டாட்டமும் ஒழியும்.

சங்கரன்: அப்படியென்றால், நூறு ஆண்டுக்கு முன்பே நாம் ஏன் இந்த வேலையைத் தொடங்கி யிருக்கக் கூடாது?

முத்தையன்: அதுவா? நாம் எத்தனையோ ஆண்டாக அன்னி யருக்கு அடிமையாக இருந் தோமே! இப்போது தானே சுதந்தரம் பெற்றோம். இனி நாம் மும்முரமாக வேலையைத் தொடங்க வேண்டும்.

சங்கரன்: ஆமாம்! சுதந்திரம் பெற்ற பிறகு, இதுவரையும் நம் அரசாங்கம் ஏதாவது செய் திருக்கிறதா?



முத்தையன்: ஓ, முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத் துப் பல காரியங்கள் சாதித்தது. இப்போது மூன்றாவது ஐந் தாண்டுத் திட்டம் நடக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் நம் நாடு இந்திர லோகமாக மாறி விடும். ஆனால், நாம் எல் லோரும் உண்மையுடனும், ஊக்கத்துடனும், ஒற்றுமை யுடனும் அரசாங்கத்தோடு ஒத் துழைக்க வேண்டும். அப்படி யானால் நாம் நினைத்த காரியம் கை கூடும்.

சங்கரன்: அப்படியா! நான் நம் நாட்டை, ஒன்றும் இல்லாத நாடு என்று மட்டமாக அல் லவா எண்ணிக் கொண்டு இருந் தேன்.

முத்தையன்: இனி அப்படி எண் ணாதே! எல்லாம் இருந்தும்

நாம் ஏழையாகத் தான் இருக்கிறோம். இது ஒரு புதிர்தான். இந்தப் புதிரை உடைத்து நாம் முன்னேற வேண்டும். இனி செழுமையான இடத்தில் வறுமை கூடாது. அதற்காக நாம் பல முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சங்கரன் : என்னென்ன !

முத்தையன் : எல்லோரும் கட்டாயம் கல்வி கற்க வேண்டும். பல அறிவு நூல்கள் படிக்க வேண்டும். பத்திரிகை படிக்க வேண்டும். உலகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

சங்கரன் : வேண்டியதுதான் ! அப்புறம் ?

முத்தையன் : தொழில் இன்றி யாரும் சும்மா இருக்கக் கூடாது. ஏதேனும் வேலை செய்தே தீரவேண்டும். உத்தியோகம் பார்க்கலாம். கூலி வேலையும் செய்யலாம். பல பொருள்கள் உற்பத்தி பண்ணலாம்.




சங்கரன் : எப்படி ?

முத்தையன் : ஒவ்வொருவர் ஒவ்வொன்று செய்யலாம். யார் யாருக்கு எது எது முடியுமோ அது அது செய்யலாம். காகிதம், அட்டை, ஓலை இவற்றால் பொருள் செய்யலாம். மண் பொம்மைகள், மரச் சாமான்கள், இரும்பு தகரச் சாமான்கள் இப்படி ஏதாவது செய்து கொண்டே இருக்க வேண்டும். அழகுப் பொருளாயும் இருக்கலாம். பயன் படுத்தும் பொருளாயும் இருக்கலாம். இப்படி செய்தால், அயல் நாட்டுப்

பொம்மைகளும் விளையாட்டுச் சாமான்களும் நம் நாட்டில் தலை காட்ட முடியுமா? பிறநாட்டுப் பொருளை யாரும் வாங்கவும் கூடாது.

சங்கரன்: நல்ல யோசனைதான்! இன்னும் உண்டா?



நூல் நூற்கலாம்

முத்தையன்: உண்டு. நூல் நூற்கலாம். சிறு சிறு தறிகள் உள்ளன. எங்கும் இடம் மாற்றி வைக்கலாம். அந்தத் தறிகள் மூலம் சிறு உடை வகைகள் தயாரிக்கலாம். முக்கியமாகப்



பெண்கள் தையல், பின்னல் வேலைகள் செய்யலாம்.

சங்கரன்: அப்புறம்?

முத்தையன்: தோட்ட வேலை செய்யலாம். தனியாகத் தோட்டம் இல்லையா? வீட்டுத் தோட்டத்தில் செய்யலாம். பூ வகைகள், கீரைகள், காய் கறிகள் பயிர் செய்யலாம்.

சங்கரன்: மேற் கொண்டு?



தேனீ வளர்க்கலாம்

முத்தையன் : பால் பண்ணை, கோழிப் பண்ணை, தேனீ வளர்ப்பு இப்படி எத்தனையோ நடத்தலாம். நிலையான வேலை உள்ளவரும் ஓய்வு நேரத்தில் இந்த வேலைகள் செய்யலாம். முடிந்த வரைக்கும் மேல் சொன்ன வேலைகளைச் செய்யக் கூடாதா ?

சங்கரன் : செய்யலாம்! ஆனால், எதுவும் செய்ய வசதி இல்லாதவர் என்ன செய்வது ?

முத்தையன் : அதற்கும் வழி உண்டு. வேலை தேடித் தரும் நிலையம் என ஒன்று இருக்கிறது. அதை அரசாங்கம் நடத்துகிறது. அங்கே போய் வேலை கேட்கலாம்.

சங்கரன் : அது வேலைக்கு ஏற்பாடு செய்யுமா ?



முத்தையன் : ஆம். அரசாங்கம் இப்போது எத்தனையோ திட்டங்கள் நடத்துகிறது. பல தொழில் பேட்டைகள் உண்டாக்கி இருக்கிறது. சுரங்கங்கள் தோண்டுகிறது. இன்னும் பல உண்டு. ஏதாவது வேலை கிடைக்கும்.

சங்கரன் : அப்படியானால், எதிர் காலத்தில் வசதியுடன் வாழ வழி உண்டு!

முத்தையன் : ஆமாம்! நம் நாட்டு மக்கள் இந்தப் பாதையில் செல்ல வேண்டும். சென்றால், எல்லோருக்கும் வேலை. எல்லோருக்கும் வருமானம். எல்லோருக்கும் வாழ்க்கை வசதிகள். அப்படி யென்றால் நாம் எல்லோரும் பணக்காரர் ஆன மாதிரிதானே! பணம்

வாழ்க்கை வசதிக்குத் தானே! எனவே எல்லோரும் பணக்காரரே! இதனுல் நம் நாடும் பணக்கார நாடு ஆகும்.

சங்கரன் : உண்மைதான்! உண்மை தான்! இனிமேல் நான் நம் நாட்டை இகழ மாட்டேன். மதித்து நடப்பேன்.

முத்தையன் : ஆமாம்! எது இல்லாவிட்டாலும் நாட்டுப் பற்று இருக்க வேண்டும். அது இருந்தால்தான் நாட்டைச் செழிக்கச் செய்ய முடியும். எங்கே, நான் முன்பு பாடினேனே-பாரதியார் பாட்டு - அந்தப் பாட்டை எல்லோரும் பாடுவோம்:

"எத்தனை சென்மங்கள் வந்து பிறந்தாலும்
இந்தியா மண்ணிடை வேண்டுவனே"